# யா/ ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயம்

## வருடாந்த பரிசளிப்பு விழா 2013

## அதிபர் அறிக்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகுட வாசகம்

"கற்பவை கற்க"

## தூர நோக்கு

தேசிய சமூக பாடசாலை வளங்களின் உதவியுடன் உயர் கல்விசார், பண்புசார் சமூகத்தினைக் கட்டியெழுப்புதல்.

## நோக்கு

நிறுவனத்தால் பெற்றுக் கொள்ளக் கூடிய ஆளணியினரைப் பயன்படுத்தியும் நவீன தொழில்நுட்ப சாதனங்களைப் பயன்படுத்தியும் பயனுறுதிமிக்க மாற்றங்களை ஏற்படுத்தும் சமூகப் பொருத்தப்பாடுடைய மாணவ சமுதாயத்தை உருவாக்குதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிசளிப்பு விழா - 2013

காலம் : 02.10.2013, புதன்கிழமை

இடம் : பாடசாலை மண்டபம்

நேரம் : பி.ப. 1.30 மணி

## தலைவர்

**திரு. வே. சிவசக்திவேல்**

(அதிபர்)

## பிரதம விருந்தினர்

**திரு. S. கந்தசாமி**

(பிரதிக்கல்விப் பணிப்பாளர் - முகாமைத்துவம், வலிகாம வலயம்)

## சிறப்பு விருந்தினர்

**திரு. A. சதானந்தன்**

(எமது முன்னாள் அதிபர்)

## கௌரவ விருந்தினர்

**திரு. T. கணேசலிங்கம்**

(ஓய்வு பெற்ற கணக்காய்வாளர்)

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்**

**நன்றி.**

பாடசாலைச் சமூகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகழ்ச்சி நிரல்

- ☞ விருந்தினரை வரவேற்றல்
- ☞ மங்கல விளக்கேற்றல்
- ☞ இறை வணக்கம்
- ☞ வரவேற்புரை
- ☞ ஆசியுரை
- ☞ வரவேற்பு நடனம்
- ☞ அதிபர் அறிக்கை
- ☞ பரிசில் வழங்கல்
- ☞ விருந்தினர் உரை
- ☞ நன்றியுரை
- ☞ கலை நிகழ்வுகள்
- ☞ பாடசாலைக் கீதம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபர் அறிக்கை

எமது வித்தியாலயத்தின் காவல் தெய்வங்களான முருகப் பெருமானையும் வைரவப் பெருமானையும் வணங்கி இன்றைய பரிசில் தின விழாவுக்கு வருகை தந்து எம்மைக் கௌரவித்துக் கொண்டிருக்கும் பிரதம விருந்தினர் அவர்களே, சிறப்பு விருந்தினர் அவர்களே, கௌரவ விருந்தினர் அவர்களே, அதிபர்களே, ஆசிரியர்களே, பெற்றோர்களே, பழைய மாணவர்களே, நலன்விரும்பிகளே, மாணவர்களே உங்கள் அனைவருக்கும் எனது அன்பு வணக்கங்களைத் தெரிவித்துக் கொள்வதில் பெருமகிழ்வடைகின்றேன்.

இன்றைய விழாவுக்குப் பிரதம விருந்தினராக வருகை தந்துள்ள அன்புக்கும், மதிப்புக்கும் உரிய பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. S. கந்தசாமி அவர்கள் எமது அழைப்பை ஏற்று வருகை தந்து 2012ம் ஆண்டுக்கான பரிசளிப்பு விழாவில் பரிசில்களை வழங்க இருக்கின்றார். அவர்களை பாடசாலைச் சமூகம் சார்பில் வரவேற்பதில் பெருமகிழ்வடைகின்றேன். எமது கல்வி வலயத்தின் வளர்ச்சிக்காக அர்ப்பணிப்புடன் சேவையாற்றும் இவரது பணி சிறக்க இறையருளை வேண்டி நிற்கின்றேன்.

அடுத்து இவ்விழாவுக்குச் சிறப்பு விருந்தினராக வருகை தருமாறு அழைத்த போது அதனை அன்புடன் ஏற்று வருகை தந்திருக்கும் எமது பாடசாலை முன்னாள் அதிபரும் தற்பொழுது ஓய்வுநிலை அதிபருமான திருவாளர் அ. சதானந்தன் அவர்களையும் வரவேற்றுக் கொள்வதில் பெருமை அடைகின்றேன். பாடசாலையைச் சிறப்பாக நிர்வகித்து ஒரு நல்ல நிலைக்குக் கொண்டு வந்த அதிபர்களில் இவரும் ஒருவர். முகாமைத்துவத் திறன் கொண்ட இவர் தமது ஓய்வு நிலைக் காலத்தில் மகிழ்வுடனும் அமைதியுடனும் நீண்ட காலம் வாழ வேண்டும் எனப் பிரார்த்திக்கின்றேன்.

எமது பரிசில் தினத்திற்குக் கௌரவ விருந்தினராக வருகை தந்திருக்கும் திரு. T. கணேசலிங்கம் அவர்களையும் அன்போடு வரவேற்றுக் கொள்கின்றேன். ஓய்வுபெற்ற கணக்காய்வாளரும் சமூக சேவையாளருமான இவர் எமது பாடசாலை நலன்விரும்பியுமாவார். எமது பாடசாலைக்குப் பல அன்பளிப்புக்களை நல்கிய இவரை நன்றியுடன் பாராட்டுகின்றேன்.

மேலும் எமது விழாவுக்கு வருகை தந்துள்ள அயற்பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள், பாடசாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர்கள், மாணவர்கள், ஊழியர்கள் அனைவரையும் அன்புடனும் மகிழ்வுடனும் வரவேற்பதில் பேருவகை அடைகின்றேன்.

எமது வித்தியாலய அன்னையின் பரிசில் தினத்தை நடாத்த வேண்டும் என்ற எமது நீண்ட நாளைய வேணவா இன்று கைகூடியுள்ளமை எமக்கு மகிழ்வைத் தருகின்றது. எமது பாடசாலை 1927ம் ஆண்டு உயர்திரு. பொன். இராமநாதவள்ளல் அவர்களால் ஸ்தாபிக்கப்பட்டது. திரு. இராமலிங்கம் செல்வநாயகம் அவர்கள் பாடசாலைக்குரிய காணியை வழங்கினார். ஏழாலையைச் சேர்ந்த திரு. சிவக்கொழுந்து அவர்கள் முதல் அதிபராகக் கடமையாற்றினார். தொடர்ந்து பல வருடங்களின் பின்னர் நவாலியைச் சேர்ந்த திரு. அப்பச்சி மகாலிங்கம் அவர்களும் அவரை அடுத்து இளைப்பாறிய தெல்லிப்பழைக் கோட்ட உதவிக்கல்விப்பணிப்பாளர் திரு. A. V. கணேசலிங்கம் அவர்களும் தொடர்ந்து திருமதி. சூ. ஜெயவீரசிங்கம் அவர்களும் அடுத்து திரு. அ. சதானந்தன் அவர்களும் அவரை அடுத்து திரு. ந. சிவகடாச்சம் அவர்களும் அதிபர்களாகப் பணிபுரிந்துள்ளார்கள்.

நான் விடுமுறையில் நின்ற காலப்பகுதியில் பதிலதிபராகக் கடமை ஏற்ற திருமதி. பா. விஜயகாந்தன் அவர்கள் கடந்த வருடம் க.பொ.த. (சா.த) பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு விசேட செயற்றிட்டங்கள் அமைத்து மேலதிக வகுப்புக்கள் நடாத்தி நல்ல பெறுபேற்றை அடைவதற்கு வழி சமைத்ததுடன் பாடசாலையைத் திறம்பட நிர்வகித்தமை எனது நன்றிக்கும் பாராட்டுக்கும் உரியதாகும்.

எமது வித்தியாலயத்தை வளர்ச்சிப் பாதையில் முன்னெடுத்துச் செல்வதற்கு என்னுடன் இணைந்து பிரதி அதிபர் திருமதி. பா. விஜயகாந்தன், உபஅதிபர் திருமதி. ஜெ. மகேந்திரன், பகுதித்தலைவர்கள் திருமதி. R. சிறிகரன், திருமதி. S. இராஜசேகரம், திருமதி. N. தனேந்திரன், திருமதி. க. அரியநேசன் ஆகியோர் பெரும்பங்காற்றி வருகின்றனர்.

உபஅதிபர் திருமதி. ஜெ. மகேந்திரன் அவர்கள் பாடசாலையின் முகாமைத்துவக் கடமைகளில் நிதி விடயங்களைப் பொறுப்புடன் பராமரித்து வருகிறார்கள். SDS, SDC, வசதிகள் சேவைக் கட்டணம், தர உள்ளீட்டுக் கணக்குகளைச் சரியான முறையில் கையாண்டு சீரான முறையில் பதிவுகளை மேற்கொண்டு பாடசாலை நிர்வாகத்தில் உறுதுணை புரியும் திருமதி. ஜெ.மகேந்திரன் அவர்களுக்கும் எனது நன்றியையும் பாரட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்து பகுதித் தலைவரான திருமதி. ர. சிறிகரன் அவர்கள் கணிதபாட ஆசிரியராகக் கடமையாற்றுகிறார். மாணவர் தலைவர்களைத் தெரிவு செய்து அவர்களுக்குரிய கடமைகளை வழங்கி அவர்களை நெறிப்படுத்தி வருகின்றார். திருமதி. ச. இராஜசேகரம் அவர்கள் உள்ளக மதிப்பீட்டுத் துறைக்குப் பொறுப்பாக உள்ளார். திருமதி. நி. தனேந்திரன் அவர்கள் நடனபாட ஆசிரியையாக இருந்தபோதிலும் விளையாட்டுத் துறைக்கும் பொறுப்பாக இருந்து பாண்ட் வாத்தியக்குழுவைப் பயிற்றுவித்து நெறிப்படுத்தி வருகின்றார். இவர்களுக்கும் எனது பாராட்டுக்கள்.

ஆரம்பக்கல்விக்குப் பொறுப்பாகத் திருமதி. க. அரியநேசன் அவர்கள் கடமையாற்றுகின்றார். இவர் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் மாணவர்கள் சிறந்த புள்ளிகளைப் பெறுவதற்கு அதிக பிரயாசை எடுத்துக் கற்பித்தார். மாணவர் சேர்வு, விலகல் தொடர்பான விடயத்துக்கும் விசேட கல்வித்துறைக்கும் பொறுப்பாக இருக்கின்றமை பாராட்டுக்குரியதாகும்.

இன்று எமது பாடசாலையில் ஆண் ஆசிரியர்கள் இருவரும் பெண் ஆசிரியர்கள் 19 பேருமாக மொத்தம் 21 பேர் கடமை ஆற்றுகின்றனர். கடந்த வருடம் ஆசிரியர் திரு. J. சாள்ஸ், திருமதி. ம. அன்ரன் பீலிக்ஸ் ஆகியோர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை சென்றுள்ளனர். சங்கீத பாட ஆசிரியர் திரு. சி.சிவஞானராஜா அவர்கள் உபஅதிபராகக் கடமையாற்றி கடந்த வருடம் ஓய்வு பெற்றுள்ளார். இவர் தமது ஓய்வுக் காலத்தை மகிழ்வுடன் கழிக்க வாழ்த்துகின்றேன்.

நிர்வாகக் கடமைகளில் ஒத்துழைப்பு வழங்கிய ஆசிரியர் திரு. S. ஆனந்தராஜா அவர்கள் வன்னி மாவட்டத்துக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளார். அத்துடன் ஆரம்பக்கல்வி ஆசிரியர் திருமதி. T. வசந்தராணி, ஆங்கில ஆசிரியர் திருமதி. V. சுந்தரகுமார், இந்துசமயபாட ஆசிரியர் திருமதி. M. சிவசுதன், சித்திரபாட ஆசிரியர் செல்வி. N. இளமதி ஆகியோர் இடமாற்றம் பெற்று வேறு பாடசாலைகளுக்குச் சென்றுள்ளனர். இவர்கள் சென்ற பாடசாலைகளில் சிறப்பாகப் பணி புரிய வாழ்த்துகின்றேன்.

5 வருடங்களுக்கு மேலாக திட்டமிடல் நிதி உதவியாளராகக் கடமையாற்றிய திருமதி. சத்தியகலா மணிவண்ணன் அவர்கள் வலயக்கல்வித் திணைக்களத்துக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளார். நிதி விடயங்களில் பொறுப்புடன் செயற்பட்டு வந்த இவரைப் பாராட்டி வாழ்த்துகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் எமது பாடசாலைக்கு வேறு பாடசாலைகளிலிருந்து இடமாற்றம் பெற்று வந்தவர்களான திருமதி. V. பாஸ்கரன், திரு. S. நீதிராஜா, திருமதி. L. தயாளன், திருமதி. T. செல்வக்குமார், திருமதி. T. துஷாந், திரு. K. நந்தகுமார்,திருமதி. B. சிவலிங்கம், திருமதி. S. சிவானந்தசர்மா, அண்மையில் இடமாற்றம் பெற்று வந்த செல்வி. பொ. விக்கினேஸ்வரி ஆகியோரை அன்புடன் வரவேற்பதோடு இவர்களது நிறைவான சேவையையும் எதிர்பார்த்து நிற்கின்றேன்.

தொண்டர் ஆசிரியர்களான திருமதி. V. சிந்துஜாவும், செல்வி. S. விந்துஜாவும், நூலக உதவியாளராக செல்வி. ச. டிலானியும் அர்ப்பணிப்புடன் சேவையாற்றி வருகின்றமை பாராட்டுக்குரியது. பாடசாலைப் பணியாளராகப் புதிதாக நியமனம் பெற்ற திரு. A. அருள்சோதி அவர்களையும் வரவேற்றுக் கொள்கின்றேன்.

நூலகம், கணனி வடிவமைப்பு, மதிய உணவு போன்ற பொறுப்புக்களை ஏற்றுச் சிறந்த முறையில் கடமையாற்றும் செல்வி. ப. சுபந்தினி அவர்களது பணி பாராட்டுக்குரியது. மாணவர்களுக்கான பசும்பால் வழங்கல் செயற்பாட்டை சிரமேற்கொண்டு செயற்படும் திருமதி. ஷ. அருள்நாதன், திருமதி. V. கிருபாகரன், திருமதி. L. தயாளன் ஆகியோரது சேவையைப் பாராட்டுகின்றேன்.

எமது பாடசாலையில் தரம் ஒன்று முதல் தரம் பதினொன்று வரையான வகுப்புக்கள் நடைபெறுகின்றன. ஆரம்பப் பிரிவில் 71 மாணவர்களும் இடைநிலைப் பிரிவில் 181 மாணவர்களுமாகத் தற்போது 252 மாணவர்கள் கல்வி கற்கிறார்கள். இவர்களில் பெரும்பான்மையினர் பொருளாதார நிலையில் மிகவும் பின்தங்கியவர்களாகவே காணப்படுகின்றனர். எமது மாணவச் செல்வங்களின் பெற்றோர்களில் பெரும்பாலானோர் தாய் தந்தை இருவரும் வேலைக்குச் செல்லும் நிலைமையில் காணப்படுகின்றனர். இருப்பினும் பாடசாலை நிகழ்வுகளிலும் பெற்றோர் சந்திப்புக் கூட்டங்களிலும் கணிசமானோர் பங்குபற்றி ஒத்துழைப்பு நல்கி வருகின்றனர். மாணவர்களுக்கான மதிய உணவுத் தயாரிப்பில் ஈடுபடும் திருமதி. கௌசலா கமலேஸ்வரன் அவர்களுக்கும் பாராட்டுக்கள்.

பாடசாலை அடைவு மட்டத்தைப் பொறுத்தவரை கடந்த வருடம் க.பொ.த. (சா. த) பரீட்சையில் 10 மாணவர்கள் தோற்றியிருந்தனர். அவர்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4 மாணவர்கள் உரிய தகைமைகளைப் பெற்று உயர்தரம் கற்பதற்காக வேறு பாடசாலை சென்றுள்ளனர். இவர்கள் மேலும் பல சித்திகளைப் பெற வாழ்த்துகின்றேன். அத்துடன் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றி வெட்டுப்புள்ளிக்கு அண்மித்த புள்ளிகளைப் பெற்ற மாணவர்களையும் 70 புள்ளிகளுக்கு மேல் புள்ளிகளைப் பெற்ற அனைத்து மாணவர்களையும் மனமார வாழ்த்துகின்றேன்.

கடந்த காலங்களில் எமது வித்தியாலயம் இணைபாடவிதான செயற்பாடுகளில் பல சாதனைகளைப் புரிந்து வந்துள்ளது. உடற்பயிற்சி, கரப்பந்து, வலைப்பந்து போன்ற போட்டிகளில் பங்குபற்றி மாகாண மட்டம் வரையில் வெற்றி பெற்றுள்ளது. பாடசாலை மெய்வல்லுநர் போட்டிகளிலும் வலய மட்டங்களிலும் மாணவர்கள் இடங்களைப் பெற்றுள்ளனர். இவர்களை வழிப்படுத்திய ஆசிரியர் திருமதி. V. பாஸ்கரன் அவர்களுக்கும் எனது பாராட்டும் நன்றிகளும். பொருத்தமான மைதானம் இல்லாதநிலையிலும் தமது திறமைகளை வெளிப்படுத்திய மாணவர்களையும் பாராட்டுகின்றேன்.

எமது பாடசாலைக்கு EKSP திட்டத்தின் மூலம் 10 கணனிகள் வழங்கப்பட்டுள்ளன. வகுப்பறை ஒன்றைக் கணனி அறையாக்கி மாணவர் தொழிநுட்பக் கல்வியைப் பெற ஆவன செய்யப்பட்டுள்ளது. உலக வங்கியின் அனுசரணையுடன் முறையான நூலகம் ஒன்று அமைக்கப்பட்டு மாணவர் களுக்குக் கற்றல் வளநிலையமாகப் பயன்படுகிறது. செயற்பாட்டறையுடன் கூடிய மனையியல் கூடம் அமைக்கப்பட்டு மாணவிகள் பயன்பெறுகின்றனர். மனைப்பொருளியல் பாடம் தொடர்பான போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவிகளையும் இவர்களை நெறிப்படுத்திய ஆசிரியர் திருமதி. ஜீ. மகிழ்ராஜதுரை அவர்களையும் பாராட்டுகின்றேன்.

மாணவர்களுக்கான நலனோம்பல் திட்டங்கள் பல எமது பாடசாலையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. சித்திரபாட ஆசிரியர் திருமதி. த. செல்வக்குமார் அவர்களால் வழிகாட்டலும் ஆலோசனையும் சேவை சிறப்பான முறையில் நடாத்தப்படுகிறது. மாணவர்களையும் ஆசிரியர்களையும் ஆற்றுப்படுத்தும் இவரைப் பாராட்டுகிறேன். மாணவரது சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கும் முகமாக வங்கிச்சேவை நடைமுறையில் உள்ளது. இதற்குப் பொறுப்பாக இருந்து செயற்படும் திருமதி. T. துஷாந் அவர்களைப் பாராட்டுகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் பொது சுகாதாரப் பரிசோதகரால் வைத்தியரின் உதவியுடன் வைத்திய பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு குறைகள் நிவர்த்தி செய்யப்பட்டு வருகின்றன. அத்துடன் மதிய உணவு, பால், முட்டை, விற்றமின் மாத்திரைகள் போன்றன வழங்குவதன் மூலம் மாணவரது போஷாக்குப் பேணப்படுவது குறிப்பிடத்தக்கது.

மாணவரது உள்ளங்களைப் பண்படுத்தும் வகையிலும் ஆன்மீக சிந்தனையைத் தூண்டும் வகையிலுமான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தினமும் காலைப் பிரார்த்தனையுடன் ஆசிரியரதும் மாணவரதும் நற்சிந்தனை இடம்பெறுகிறது. வெள்ளிக்கிழமைகளில் விசேட வழிபாடும் சொற்பொழிவும், சஞ்சிகை வெளியீடும் இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது. இந்து மன்றத்தினர் குருபூசைத் தினங்களை அனுஷ்டிப்பதுடன் பொங்கல்விழா, நவராத்திரி விழா, வைரவர் ஆலயக் கும்பாபிஷேகதின விழா போன்றவற்றையும் நடாத்தி மாணவர் சமயப் பழக்கவழக்கங்களைக் கைக்கொள்ள ஒத்துழைப்பு வழங்குகின்றனர். அத்துடன் மூத்தநயினார் ஆலய மகோற்சவத்தின் போது வித்தியாலயவாசலில் கும்பம் வைத்து வழிபாடு இடம்பெறுவதுடன் எமது மாணவர்கள் தேவார திருமுறை இசைப்பதுவும் குறிப்பிடத்தக்கது. மேலும் மானிப்பாய் மருதடி விநாயகர் உற்வசத்தின் போதும் கீரிமலை நகுலேஸ்வர உற்சவத்தின் போதும் பஜனைப் பாடல்கள் பாடுவதற்கு மாணவர்கள் அழைத்துச் செல்லப்படுவர். இவர்களை வழிப்படுத்தும் ஆசிரியர்களான திருமதி. ட. தேவமனோகரன், திருமதி. சி. பாமினி, திருமதி. த. துஷாந் ஆகியோருக்கும் எனது பாராட்டுக்கள்.

மேலும் கத்தோலிக்க மன்றத்தினர் தினமும் காலைப் பிரார்த்தனை செய்வதோடு வருடாந்தம் ஒளிவிழாவினையும் சிறப்பாகக் கொண்டாடி வருகின்றனர். இவர்களை நெறிப்படுத்தும் ஆசிரியர்களைப் பாராட்டுகிறேன்.

புதன்கிழமை தோறும் மன்றச் செயற்பாடுகள் இடம்பெற்று மாணவரது திறமைகள் வெளிக்கொணரப்படுகின்றன. இந்துமன்றம், தமிழ்மன்றம், கணித விஞ்ஞான மன்றம், சமூக விஞ்ஞான மன்றம், ஆங்கில மன்றம், அழகியல் மன்றம், தொழிநுட்ப மன்றம் ஆகிய மன்றங்கள் தமது திறமைகளை வெளிப் படுத்துகின்றன. இம் மன்றங்களுக்குப் பொறுப்பான ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் பாராட்டினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

புத்தாக்கத் திறன் போட்டியில் எமது பாடசாலை மாணவர்கள் மூவர் மாகாண மட்டப் போட்டியில் பங்குபற்றியிருந்தனர். இவர்களை ஊக்குவித்து போட்டியில் வெற்றி பெற வழிவகுத்த திருமதி. T. கமலராசன் அவர்களுக்குப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாராட்டுக்கள். அத்துடன் ஆங்கில தினப் போட்டிகளில் மாணவரை ஈடுபடுத்திய ஆசிரியர்களாக திருமதி. L. தயாளன், திருமதி. S. சிவானந்தசர்மா ஆகியோரையும் பாராட்டுகிறேன். தரம் 3 - 11 வரையான வகுப்புக்களுக்குப் பொது அறிவுப்போட்டி நடாத்திப் பெறுபேறுகளை உரிய காலத்தில் வழங்கிய ஆசிரியர் திரு. K. நந்தகுமாருக்கும் எனது பாராட்டுக்கள்.

எமது வித்தியாலயத்தின் வளர்ச்சிக்கு உறுதுணை புரிந்து வரும் பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், பாடசாலை மேம்பாட்டுக்குழு உறுப்பினர்கள், பழைய மாணவர் சங்கத்தினர் ஆகியோருக்கும் எனது நன்றிகள். குறிப்பாக பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் திருமதி. ஜெயந்தி பரமேஸ்வரன் அவர்களுக்கும் பழைய மாணவர் சங்கச் செயலாளர் திரு. க. பிரபாகரன் அவர்களுக்கும், பொருளாளர் திரு. பொ. பிரபாகரன் அவர்களுக்கும் எனது நன்றியையும் பாராட்டினையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

எமது வித்தியாலயத்தின் வளர்ச்சியில் அக்கறை கொண்டு எமது ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்த வலயக்கல்வித் திணைக் களத்தினருக்கும் வேண்டியபோது ஆலோசனைகள் வழங்கி ஊக்குவிக்கும் கோட்டக்கல்விப் பணிப்பாளருக்கும் சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்களுக்கும் குடும்பமட்டப் போட்டிகள் செவ்வனே நடைபெற ஒத்துழைப்பு நல்கிய குடும்பப் பாடசாலை அதிபர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் எனது நன்றிகள்.

எமது பாடசாலைத் திருத்த வேலைகளின் போது மாலை வேளைகளில் தமது நேரத்தினை ஒதுக்கி பாடசாலைக்கு வந்து மேற்பார்வை செய்து ஒத்துழைத்த ஓய்வு பெற்ற உபஅதிபர் திரு. சி. சிவஞானராஜா அவர்களுக்கும் திரு. S. நீதிராஜா அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் பாடசாலையை நிர்வகிப்பதில் எனக்கு உறுதுணைபுரியும் பிரதி அதிபர், உபஅதிபர், பகுதித் தலைவர்கள் ஆகியோருக்கும் சகல வழிகளிலும் ஒத்துழைப்பு நல்கும் அன்பான ஆசிரியர்களுக்கும் மாணவச்செல்வங்களுக்கும் இவ் வேளையில் என் உளங்கனிந்த நன்றியைக் கூறிக் கொள்கிறேன்.

அத்துடன் பாடசாலை நலனில் அக்கறை கொண்டு உதவிகளும் ஆலோசனைகளும் வழங்கி வரும் முன்னாள் உபஅதிபர் திரு. K. கதிரேசு, முன்னாள் அதிபரும் ஓய்வுபெற்ற கோட்டக்கல்விப் பணிப்பாளருமான திரு. A.V. கணேசலிங்கம் ஆகியோருக்கும் நலன் விரும்பிகளான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. K.சண்முகம், "தணிஸ் ரெக்ஸ்" உரிமையாளர் திரு. T. கணேசலிங்கம் 50 வறிய மாணவர்களுக்கு இலவச வங்கிக் கணக்கை ஆரம்பித்து உதவிய "சந்திரன் பான்சி பலஸ்" உரிமையாளர் திரு. T. இராமச்சந்திரன், பத்திரிகையாளர் திரு. S. பொன்னுத்துரை, புகைப்படக்கலைஞர் திரு. S.ராஜன் ஆகியோருக்கும் U.N.D.P நிறுவனத்தின் அனுசரணையுடன் பாண்ட் வாத்தியக்கருவிகள் அதற்கான சீருடைகள் என்பவற்றை இலவசமாகப் பெற்றுக்கொடுத்த மாதர் சங்கத் தலைவி திருமதி. S. செல்வி ஆகியோருக்கும் திரு. S. சதீசன் அவர்களுக்கும் இவ் வேளையில் நன்றிகளும் பாராட்டுக்களும் உரித்தாகட்டும்.

நிறைவாக அன்பான பெற்றோர்களே, பழைய மாணவர்களே, நலன்விரும்பிகளே எமது பாடசாலையை வளர்ச்சிப் பாதையில் இட்டுச் செல்வதற்கு உங்கள் அனைவரினதும் ஒத்துழைப்பை எதிர்பார்த்து இன்றைய பரிசில் தின விழாவுக்கு வருகை தந்த அனைவருக்கும் நன்றி கூறி விடைபெறுகின்றேன்.

நன்றி.

## S. D. M. G. திட்டத்தில் நடைமுறைப்படுத்திய செயற்றிட்டங்கள்

1. கிணறு ஆழப்படுத்தியமை.
2. மலசல கூடங்கள் திருத்தியமை.
3. நீர்க்குழாய் திருத்தியமை.
4. வகுப்பறைக் கூரைத் திருத்தம்.

## நடைமுறைப்படுத்த உத்தேசித்துள்ள திட்டங்கள்

1. நடன அறைத் திருத்தம்.
2. பீலியமைத்தல்.
3. காட்சிப் பலகை அமைத்தல்.

## தேவைகள்

1. 20' x 20' வகுப்பறைகள் - 4
2. விஞ்ஞான கூடம்
3. விளையாட்டு மைதானம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் விபரம் - 2013

| இல | ஆசிரியரின் முழுப்பெயர் | தரம் | தராதரம் |
|---|---|---|---|
| 01 | திரு. வேலாயுதம் சிவசக்திவேல் | SLPS 2 - II | B.A. Sc.Trd |
| 02 | திருமதி. பாலஜெயந்தி விஜயகாந்தன் | SLTS I | B.A. M.Phil |
| 03 | திருமதி. ஜெயச்செல்வி மகேந்திரன் | SLTS I | B.Com Dip in Ed |
| 04 | திருமதி. ரஜனி ஸ்ரீகரன் | SLTS I | B.A. Maths. Trd |
| 05 | திருமதி. ஜீவமலர் மகிழ்றாஜதுரை | SLTS 2 - I | A/L Ho.Sc.Trd |
| 06 | திருமதி. பத்மலோசனி தேவமனோகரன் | SLTS 2 - I | A/L Pri.Trd |
| 07 | திருமதி. விஜயலக்சுமி கிருபாகரன் | SLTS 2 - I | A/L Pri.Trd |
| 08 | திருமதி. கமலலோசனி அரியநேசன் | SLTS 2 - I | A/L Pri.Trd |
| 09 | திருமதி. விஜயசித்ரா பாஸ்கரன் | SLTS 2 - I | A/L Phy.Trd |
| 10 | செல்வி. விக்னேஸ்வரி பொன்னன் | SLTS 2 - I | A/L Pri.Trd |
| 11 | திருமதி. சசிகலா இராஜசேகரம | SLTS 2 - II | B.A. Dip in Ed |
| 12 | திருமதி. தமிழினி கமலராசன் | SLTS 2 - II | A/L Sc.Trd |
| 13 | திருமதி. நிசாந்தி தனேந்திரன் | SLTS 2 - II | B.FA (Dance) |
| 14 | செல்வி. சுபந்தினி பரம்சோதி | SLTS 2 - II | B.Sc Dip in Ed |
| 15 | திருமதி. ஷியானி அருள்நாதன் | SLTS 2 - II | A/L Chri.Trd |
| 16 | திரு. சுப்பிரமணியம் நீதிராஜா | SLTS 2 - II | HNDC Dip in Ed |
| 17 | திருமதி. லிங்கேஸ்வரி வின்சன் தயாளன் | SLTS 2 - II | B.A. Dip in Ed |
| 18 | திருமதி. தனுசியா செல்வக்குமார் | SLTS 2 - II | A/L Art Trd |
| 19 | திருமதி. பாமினி சிவலிங்கம் | SLTS 2 - II | A/L Tamil Trd |
| 20 | திருமதி. தக்சாயினி துஷாந்த் | SLTS 3 - I | B.FA. (Music) |
| 21 | திருமதி. சங்கீதா சிவானந்தசர்மா | SLTS 3 - I | B.A. |
| 22 | திரு. குமாரசாமி நந்தகுமார் | SLTS 3 - I | A/L N.D.C.O.E |

## பாடசாலைப் பணியாளர்

திரு. அருளம்பலம் அருள்சோதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2012 இல் பரிசில் பெறுவோர் விபரம்

## பொதுத்தகைமை

### தரம் 1

| | | |
|---|---|---|
| 1. | க. நிருசிகா | - 1ம் இடம் |
| 2. | ர. நிரஞ்சினி | - 2ம் இடம் |
| 3. | க. மதுசா | - 3ம் இடம் |

### தரம் 2

| | | |
|---|---|---|
| 1. | து. தனுசன் | - 1ம் இடம் |
| 2. | ச. சஞ்ஜீவன் | - 2ம் இடம் |
| 3. | ச. துசிந்த் | - 3ம் இடம் |

### தரம் 3

| | | |
|---|---|---|
| 1. | து. கிருஷாயினி | - 1ம் இடம் |
| 2. | ய. யஸ்மீதன் | - 2ம் இடம் |
| 3. | அ. பிருந்தாயினி | - 3ம் இடம் |

### தரம் 4

| | | |
|---|---|---|
| 1. | ந. றொபின்சன் | - 1ம் இடம் |
| 2. | சி. கவிகரன் | - 2ம் இடம் |
| 3. | சு. பவிதாரணி | - 3ம் இடம் |

### தரம் 5

| | | |
|---|---|---|
| 1. | ர. நிதுஜா | - 1ம் இடம் |
| 2. | ப. பானுஜா | - 2ம் இடம் |
| 3. | ர. டேசிகா | - 3ம் இடம் |

### தரம் 6

| | | |
|---|---|---|
| 1. | ம. அஜித் | - சைவசமயம், ஆங்கிலம், கணிதம், சுகாதாரம், விஞ்ஞானம், புவியியல், குடியுரிமை, சங்கீதம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. வி. கஜேந்தினி - தமிழ், வரலாறு, குடியுரிமை, செய்முறைத் தொழில்நுட்பம்
3. ச. தக்ஷி - பரதநாட்டியம்
4. வி. ஜெயரூபன் - சித்திரம்
5. வி. வினுஷா - கிறிஸ்தவம்

## தரம் 7

1. ஜெ. டிலக்சன் - சைவசமயம், ஆங்கிலம், விஞ்ஞானம் புவியியல், செய்முறைத் தொழில் நுட்பம்
2. த. யதுசிகா - தமிழ், குடியுரிமை, சங்கீதம்
3. ம. பிரகாசன் - கணிதம், வரலாறு, சுகாதாரம்
4. க. டிலக்சி - பரதநாட்டியம்
5. ம. விதுசன் - றோ. க. அல்

## தரம் 8

1. ர. பிரியதர்சினி - சைவசமயம், கணிதம், ஆங்கிலம், சுகாதாரம், புவியியல், வரலாறு
2. ர. பிரியதர்ஷா - கணிதம், தமிழ், சங்கீதம்
3. வே. நியூசிகா - கிறிஸ்தவம், பரதநாட்டியம்
4. இ. மதுசன் - விஞ்ஞானம்
5. க. குமரன் - சித்திரம்

## தரம் 9

1. த. தர்சிகா - சைவசமயம், தமிழ், ஆங்கிலம், சுகாதாரம்
2. த. தர்சிகன் - விஞ்ஞானம், வரலாறு, புவியியல்
3. ம. விதுஷா - சங்கீதம், செய்முறைத் தொழில்நுட்பம்
4. ஜெ. ரேணுகா - கிறிஸ்தவம்
5. ஜெ. உஷாந்தினி - கணிதம்
6. சி. சாருஜன் - குடியுரிமை
7. க. ஜெனுசா - சித்திரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரம் 10

1. க. ஜீவிதா - சைவசமயம், தமிழ், ஆங்கிலம், விஞ்ஞானம், வரலாறு, சங்கீதம், ICT, வர்த்தகம்
2. ஸ்ரீ. நிதூஜா - கிறிஸ்தவம்
3. பொ. பிரியதர்ஷன் - சித்திரம், குடியுரிமை
4. பு. நிருபன் - சித்திரம்
5. ம. பிரதீபன் - விவசாயம்
6. இ. விதுர்சன் - கணிதம்
7. க. டிலானி - மனையியல்
8. சி. தர்சலா - பரதநாட்டியம்

தரம் 11

1. ர. செந்தூரன் - சைவசமயம், வர்த்தகம்
2. ச. சஞ்ஜீவன் - ஆங்கிலம்
3. பா. கஜீபன் - கணிதம்
4. ஸ்ரீ. பிரசன்னா - சித்திரம், விவசாயம்
5. ம. சரண்யா - தமிழ், மனையியல், குடியுரிமை
6. ச. ரேவதி - விஞ்ஞானம், வரலாறு, சங்கீதம்
7. ரு. பிரசாந்தினி - பரதநாட்டியம்

# பொது அறிவுப்போட்டி முடிவுகள் – 2013

தரம் - 3

1. ஜெ. நந்துஜா - 1ம் இடம்
2. க. தனுசன் - 2ம் இடம்
3. ர. அஜந்திகா - 3ம் இடம்

தரம் - 4

1. து. கிருஷாயினி - 1ம் இடம்
2. யோ. யஸ்மீதன் - 2ம் இடம்
3. ம. கம்சிகா - 3ம் இடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரம் - 5

| | | | |
|---|---|---|---|
| 1. | சு. பபிதாரணி | - | 1ம் இடம் |
| 2. | சி. கவிகரன் | - | 2ம் இடம் |
| 3. | ந. றொபின்சன் | - | 3ம் இடம் |

தரம் - 6

| | | | |
|---|---|---|---|
| 1. | ர. டேசிகா | - | 1ம் இடம் |
| 2. | செ. கிருபன் | - | 2ம் இடம் |
| 3. | ர. நிதுஜா | - | 2ம் இடம் |

தரம் - 7

| | | | |
|---|---|---|---|
| 1. | ஜெ. இசையழகி | - | 1ம் இடம் |
| 2. | ம. அஜித் | - | 2ம் இடம் |
| 3. | ச. தக்ஷி | - | 3ம் இடம் |

தரம் - 8

| | | | |
|---|---|---|---|
| 1. | ப. டிலக்சன் | - | 1ம் இடம் |
| 2. | ம. பிரகாஷன் | - | 2ம் இடம் |
| 3. | த. யதுஷிகா | - | 3ம் இடம் |

தரம் - 9

| | | | |
|---|---|---|---|
| 1. | த. ஜெனார்த்தனன் | - | 1ம் இடம் |
| 2. | ர. பிரியர்சினி | - | 2ம் இடம் |
| 3. | க. குமரன் | - | 3ம் இடம் |
| 4. | இ. மதுஷன் | - | 3ம் இடம் |

தரம் - 10

| | | | |
|---|---|---|---|
| 1. | தர்சிகன் | - | 1ம் இடம் |
| 2. | தர்சிகா | - | 2ம் இடம் |
| 3. | ப. துஷ்யந்தன் | - | 3ம் இடம் |

தரம் - 11

| | | | |
|---|---|---|---|
| 1. | ம. சரண்யா | - | 1ம் இடம் |
| 2. | க. தணிஸ்வரன் | - | 2ம் இடம் |
| 3. | சி. நிதூஜர் | - | 3ம் இடம் |
| 4. | ம. பிரதீபன் | - | 3ம் இடம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விசேட பரிசில் பெறுவோர் விபரம் - 2012

தரம் - 1

1. ர. நிறஞ்சினி - பண்ணிசைப் போட்டி குடும்ப மட்டம் 1ம் இடம்
2. க. நிருசிகா - சித்திரப்போட்டி குடும்ப மட்டம் 3ம் இடம்

தரம் - 5

1. க. லக்ஷி - பண்ணிசைப் போட்டி வலயம் 3ம் இடம்

தரம் - 8

1. கு. பிறித்திகா - ஆங்கில உறுப்பெழுத்து போட்டி கோட்ட மட்டம் 3ம் இடம்

## தமிழ் தினப்போட்டி குழுநடனம் கோட்ட மட்டம் - 3ம் இடம்

1. ப. பானுசா
2. க. டிலக்ஷி
3. ச. தக்ஷி
4. வே. நியூசிகா
5. உ. விஜயதாரணி
6. ஜெ. ரேணுகா
7. ர. சரண்யா
8. தி. தர்சனா
9. பி. சரண்யா

## தனிநடனம் கோட்ட மட்டம் - 3ம் இடம்

1. ர. சரண்யா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விசேட பரிசில் பெறுவோர் விபரம் - 2013

தரம் - 1

1. ர. தர்சானந் - பண்ணிசைப்போட்டி குடும்ப மட்டம் 1ம் இடம்
திருக்குறள் மனனப் போட்டி குடும்ப மட்டம் 3ம் இடம்

தரம் - 3

1. து. தனுசன் - சிங்கள விநாடி வினா போட்டி கோட்ட மட்டம் 2ம் இடம்
2. ஜெ. நந்துஜா - பண்ணிசைப் போட்டி குடும்ப மட்டம் 3ம் இடம்

தரம் - 4

1. து. கிருஷாயினி - பண்ணிசைப்போட்டி குடும்ப மட்டம் 1ம் இடம்
சிங்கள விநாடி வினாபோட்டி கோட்ட மட்டம் 1ம் இடம்

தரம் - 5

1. அ. கிருஷாந்தினி - பண்ணிசைப்போட்டி குடும்ப மட்டம் 1ம் இடம்
2. சு. பபிதாரணி - திருக்குறள் மனனப் போட்டி குடும்ப மட்டம் 3ம் இடம்
3. ந. றொபின்சன் - சித்திரப்போட்டி குடும்ப மட்டம் 3ம் இடம்

## தமிழ் தினப்போட்டி குழுப்பாட்டு கோட்ட மட்டம் - 1ம் இடம்

1. ர. பிரியதர்ஷினி
2. ர. பிரியதர்ஷா
3. கு. லோஜிகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. ர. டேசிகா

5. க. லக்ஷி

6. ப. பானுஜா

7. ர. நிதுஜா

8. ஜெ. இசையழகி

9. ச. லக்சனா

10. த. யதுஷிகா

### புத்தாக்கப்போட்டி மாகாணமட்டத்தில் வெற்றியீட்டியோர்

1. க. குமரன்

2. ஸ்ரீ. எபிக்சன்

3. த. ஜனார்த்தனன்

### மனைப்பொருளியல் போட்டி

1. ம. சரண்யா - கோட்டம் 1ம் இடம்
   வலயம் 2ம் இடம்

### கோட்ட மட்ட மெய்வல்லுநர் போட்டியில் வெற்றி பெற்றோர்

1. ம. சுமித்திரா - 100m 2ம் இடம்
   - 200m 1ம் இடம்
   - 400m 3ம் இடம்

2. தி. றஜித்தா - உயரம் பாய்தல்

3. உ. விஜயதாரணி - தட்டெறிதல் 2ம் இடம்

4. தி. தர்சனா - 400m 3ம் இடம்

5. செ. கஜீபன் - குண்டெறிதல் 1ம் இடம்
   தட்டெறிதல் 3ம் இடம்

6. ந. றொபின்சன் - உயரம் பாய்தல் 2ம் இடம்,
   வலயம் 2ம் இடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் வெட்டுப் புள்ளிக்கு அண்மித்த புள்ளி பெற்றோர் விபரம் - 2012

1. ப. பானுஜா
2. ர. டேசிகா
3. ர. நிதுஜா
4. செ. கிருபன்
5. வி. தர்மிலன்
6. க. லக்ஷி
7. செ. கவிதர்ஷன்
8. சி. கஜீபன்

## க. பொ.த (சா.த) பரீட்சையில் சித்தியடைந்தோர் - 2011

1. க. கரன்
2. செ. விதுஷன்
3. செ. றபீனா
4. செ. சியாமளா
5. ப. சுகன்யா
6. இ. சரண்யா

## க.பொ.த (சா.த) பரீட்சையில் சித்தியடைந்தோர் - 2012

1. பா. கஜீபன்
2. ர. செந்தூரன்
3. ச. ரேவதி
4. செ. தயானா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லூரி கீதம்

### பல்லவி

பாலசுப்பிரமணிய வித்தியாலயம் வாழ்க
கோல ஆனைக்கோட்டை வளர்
கோயில் கொண்ட எங்கள் அன்னை
பாலசுப்பிரமணிய வித்தியாலயம்

### அனுபல்லவி

சீலமொடு கல்விகலை சேர்த்து ஊட்டும் தாயவள்
ஞாலமதில் எமக்குக் கல்வி ஞானம் தரும் தூயவள்
பால சுப்ர மணிய வித்தியாலயம்

### சரணங்கள்

ஆசிரியர் அதிபரை அனுதினமும் நாம் துதிப்போம்
அவர் தரும் அறிவுரைகள் அனைத்தையும் நாம் மதிப்போம்
காசினியில் கல்விதனை கசடற நாமும் கற்போம்
கல்வியினை நாம் பயின்று கற்றாங்கு ஒழுகி நிற்போம்
பால சுப்பிர மணிய வித்தியாலயம்

விஞ்ஞானம் கணிதமொடு விளையாடல் ஆடல் பாடல்
மெய்ஞ்ஞான நெறிகளோடு மேவு தமிழ் ஆங்கிலமும்
அஞ்ஞானம் நீக்கியென்றும் அறிவு தரும் பாடங்களை
எஞ்ஞான்றும் தந்து எம்மை ஏற்றி வைக்கும் எங்கள் அன்னை

ஆயிரத்துத் தொளாயிரத்து இருபத்தேழாம் ஆண்டிலே
தூயராம நாத வள்ளல் தொடக்கி வைத்த ஆலயம்
தாயவளாம் பாலசுப்பிரமணிய வித்தியாலயம்
ஆயகல்வி கலை எமக்கு அள்ளித் தரும் அறிவாலயம்
பால சுப்ர மணிய வித்தியாலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாமரை மலர் மலரும் தடாகமும் சூழ்ந்திருக்கும்
மாமதுர அருள் பொழியும் மூத்தநயினார் வீற்றிருக்கும்
தேமதுரத் தமிழ் பயிற்றும் தெய்வக்குரு அருள் இருக்கும்
பூமலரும் முகத்துடனே பூந்தமிழ் சைவம் வளர்க்கும்
பால சுப்ர மணிய வித்தியாலயம்

வாழ்க வாழ்க வாழ்க பாலசுப்பிரமணிய வித்தியாலயம்
சூழ்க கல்வி கலைமகள் என்றும் சோபனம் சேர்ந்தோங்குக
ஏழிசையிற் பாடி நாமும் எங்கள் தாயைப் போற்றுவோம்
வாழி வாழி வாழி என்று வாழ்த்துப்பாடி ஏற்றுவோம்
பால சுப்ர மணிய வித்தியாலயம்

ஆக்கம் - பிரம்மஸ்ரீ ந. வீரமணி ஐயர்
இணுவையூர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரூபன் பிறிண்டேர்ஸ். ஆனைக்கோட்டை. T.P 021 225 5566

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org